# தகவல் பாலம்

## துாய ஆரோக்கிய அன்னைப் பங்கு

## OUR LADY OF GOOD HEALTH PARISH

Volume 1, Issue 5 July 2019


***PASTORAL STAFF:***

**Fr. Charles W. Collins**
*Pastor*

Maureen Rajadurai
*Secretary*

***MASS SCHEDULE:***

| | |
|---|---|
| **Sunday:** | **12:30 pm & 4:30 pm** |
| **Tuesday & Wednesday:** | **7:30 pm** |
| **First Friday:** | **7:30 pm** |

***OFFICE HOURS:***

| | |
|---|---|
| **Monday:** | **Closed** |
| **Tuesday - Friday:** | **9:00 am – 6:00 pm** |
| **Saturday:** | **9:00 am – 3:00 pm** |
| **Sunday:** | **11 am – 4 pm;<br>5:30 pm – 7 pm** |


***OUR LADY OF GOOD HEALTH PARISH***

**131 Birchmount Road,**
**Scarborough, ON. M1N 3J7**
***(Birchmount & Danforth Ave.)***

| | |
|---|---|
| **Phone:** | **416-264-OLGH (6544)** |
| **Fax:** | **416-264-6545** |
| **Email:** | **Office@olghtamilparish.com** |
| **Website:** | **www.olghtamilparish.com** |


### வாரநாள் திருப்பலிகள்

**செவ்வாய்க்கிழமை:** துாய அந்தோனியார் நவநாள் மாலை 7:00 மணிக்கு செபமாலையும் 7:30 மணிக்கு திருப்பலியும்

**புதன்கிழமை:** சதாசகாய அன்னை நவநாள் மாலை 7:00 மணிக்கு செபமாலையும் 7:30 மணிக்கு திருப்பலிம்

### முதல் வெள்ளி - நற்கருணை வழிபாடு

மாலை 7:00 மணிக்கு செபமாலையும் 7:30 மணிக்கு நற்கருணை வழிபாடும் தொடர்ந்து திருப்பலியும்

### எமது பணிப் பீடங்கள்

- பங்குச் சபை
- பீடப் பணியாளர்கள்
- வாசகர்கள்
- நற்கருணைப் பணியாளர்கள்
- வரவேற்பாளர்கள்
- பாடகர் குழுவினர்
- மரியாயின் சேனை
- நிதிப் பொறுப்பாளர்கள்
- தன்னார்வத் தொண்டர்கள்




**இவ்வருடம் எமது தமிழ் கத்தோலிக்க பங்கின் 25ஆது ஆண்டு நிறைவைக் கொண்டாடுகின்றோம். எமது தமிழ் கத்தோலிக்க பங்கில் உங்களது குடும்பங்களையும் பதிவு செய்துகொள்ள மறக்காதீர்கள்.**

**வெள்ளி விழா**
1994 - 2019



**அன்பான அன்னையின் மக்களே,**

கனடா மண்ணில் மறைசாட்சிகளின் புனித பூமியின் மேல் நின்றுகொண்டு அன்னைக்கு விழா கொண்டாடும் இத்தருணத்தில் உங்கள் செபத்துடன் கூடிய நிறைவான வாழ்த்துகளை தெரிவித்துக்கொண்டு இவ் அழகான மிட்லண்ட் திருப்பயணத்திற்கு இவ்வருடம் சிறப்பிக்க வருகை தந்துள்ள திருமலை, இலங்கை ஆயர், மேதகு நோயல் இம்மானுவேல் ஆண்டகை அவர்களை கனடா வாழ் தமிழ் மக்கள் சார்பில் வரவேற்று மகிழ்கிறேன். தமிழ் கத்தோலிக்கர்களின் ஆன்மீக தேவைகளை பூர்த்தி செய்வதற்கும், ஒரு விசுவாசம் நிறைந்த சமூகமாக தொடர்ந்து இறை நம்பிக்கையில் வளரவும் வழிவகுத்த ரொறன்ரோ அதி உயர் மறைமாவட்ட கார்டினல் கொலின்சை நன்றியுடன் நினைக்கின்றோம். மன்னார், திரிகோணமலை, மட்டக்களப்பு, யாழ்ப்பாணம் போன்ற மறைமாவட்ட ஆயர்கள், குருக்கள், துறவிகள் மற்றும் இறைமக்கள் சார்பிலும் நீங்கள் நீண்ட காலம் தாராளமாக செய்துவரும் உதவிகள், ஆலோசனைகள், வழிகாட்டுதல்கள் அனைத்திற்கும் மனம் நிறைந்த நன்றிகள்,

தூய ஆரோக்கிய அன்னை பங்கின் எதிர்கால வளர்ச்சி இன்றைய இளையோர், மாணவர், சிறுவர்களின் கைகளில் தங்கி இருக்கிறது. எமது பங்கின் 25வது வருட நிறைவின் மகிழ்வில் பயணிக்கும் இவ்வேளையில் எனது அன்பான வேண்டுகோள். எமது பங்கின் வளர்ச்சிக்கு மொழி எவ்வகையிலும் தடையாக இருக்கக்கூடாது என்பது என் ஆவல். ஆகவே தொடர்ந்து எமது எதிர்கால சமூகமும் படிப்படியாக எமது பங்கின் வளர்ச்சியில் அக்கறையும் பங்களிப்பும் செய்யுமாறு அவர்களை வழி நடத்த வேண்டியது எமது பொறுப்பாகும். நாம் எமது பங்கின் பணிப்பீடத்தை பலப்படுத்துவோம். பங்குச்சபை, பீடப்பணியாளர்கள், வாசகர்கள், நற்கருணைப் பணியாளர்கள், வரவேற்பாளர்கள், பாடகர் குழுவினர், மரியாயின் சேனை, நிதிப்பொறுப்பாளர்கள், உதவியாளர்கள் என்ற பணிகளில் உங்களை இணைத்துக்கொண்டு தூய ஆரோக்கிய அன்னைப் பங்கை வளர்ப்போம்,

உங்கள் அனைவருக்கும் நல்லாசிகளையும் மனம் நிறைந்த மிட்லண்ட் மறைசாட்சிகளின் பரிந்துரையும், தூய அன்னையின் அசீரையும், ஆண்டவர் இயேசுவின் நிறைவான ஆசீர்வாதங்களையும் ஆசித்து நன்றி கூறுகிறேன்.

**சாள்ஸ் கொலின்ஸ்**
*பங்குத்தந்தை*
*தூய ஆரோக்கிய அன்னைத் தமிழ்ப் பங்கு*




## திருமுழுக்கு அருட்சாதனம்

**பிரதி ஞாயிற்றுக்கிழமை மாலை 3:00 மணி**

பெற்றோர்கள் திருமுழுக்கு அருட்சாதன ஆயத்த வகுப்பில் பங்கெடுப்பது முக்கியமானது. ஒவ்வொரு மாதத்திலும் வருகின்ற முதல் செவ்வாய்க்கிழமைகளில் மாலை 6:00 மணி தொடக்கம் மாலை 7:00 மணி வரை எமது பங்கில் ஆயத்த வகுப்புகள் நடைபெறும். மேலதிக விபரங்களுக்கு எமது அலுவலகத்தைத் தொடர்பு கொள்ளவும்.

---

## ஒப்புரவு அருட்சாதனம்

அனைத்து திருப்பலிகளின் முன்பும் பின்பும் அல்லது முன்னேற்பாட்டுடன் ஒப்புரவு அருட்சாதனத்தைப் பெற்றுக்கொள்ளலாம்.

---

## திருமண அருட்சாதனம்

தயவுசெய்து பங்குத்தந்தையை காலம் தாமதிக்காமல் தொடர்பு கொள்ளவும். ஒரு வருடத்திற்கு முன்னர் அறிவிப்பது விரும்பத்தக்கது. ரொறன்ரோ மறைமாவட்டத்தினால் ஒழுங்குசெய்யப்படுகின்ற திருமண ஆயத்த வகுப்புகளில் பங்குபற்றி சான்றிதழைப் பெற்றுக்கொள்வதும் அவசியமானது.

---

## பாடல் புத்தகம் - புதிய செபங்கள்

1400 பாடல்கள் அடங்கிய பாடல் புத்தகம் மிக விரைவில் வெளியிடப்படவிருக்கின்றது. அதில் உங்களுடைய பெற்றோர், பிள்ளைகள், சகோதரர்கள், உறவினர்களின், நண்பர்களின் நினைவாக புகைப்படத்துடன் கூடிய பக்கம் ஒன்றை பாடல் புத்தகத்தில் பதிவிட விரும்பினால் எமது பங்கு அலுவலகத்தைத் தொடர்பு கொள்ளவும்.

எமது செபங்களில் பல்வேறு மொழி மாற்றம், சொல் மாற்றங்கள் இடம்பெற்றுள்ளதை நீங்கள் அறிவீர்கள். ஆலயத்தில் வழங்கப்படும் செபங்கள் அடங்கிய அட்டைகளைப் பயன்படுத்தி, புதிய செபங்களை இணைந்து சொல்வதன் மூலம் எம்மைப் பழக்கப்படுத்திக் கொள்வோம்.

---

## Liturgy of the Word with Children

Sunday at 12.30 pm and 4.30 pm (During the mass)